# கொட்டாஞ்சேனை சைவ ஆலயத்திற்கு முஸ்லிம்கள் தீவைப்பு; பக்தர்களுக்குகத்திக்குத்து, பலர்காயம்!

(கொழும்பு)

கொட்டாஞ்சேனையிலுள்ள பிரசித்திபெற்ற சைவக்கோயிலொன்றில் வழிபாடு நடந்து கொண்டிருந்தபோது ஆயுதங்களுடன் உள்ளே நுழைந்த முஸ்லிம்கள் அங்கிருந்த வயோதிபர்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட பலரைத் தாக்கியதுடன் கோயிலையும் தீமூட்டி எரித்தார்கள். இச்சம்பவத்தில் பல இந்துக்கள் கத்திக்குத்துக்கும் இலக்கானதாகக் கொழும்புப் பொலிசார் தெரிவித்தார்.

இந்துக்களின் வழிபாட்டு நாளான நேற்று வெள்ளிக்கிழமை குறிப்பிட்ட ஆலயத்தில் பெருந்தொகையான பக்தர்கள் வழிபாடு நடத்திக் கொண்டிருந்தார்கள்.

இதேநேரம் அங்கிருந்த பள்ளிவாசலொன்றில்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 கார்த்திகை 8 ஜ: அவ்வல் பிறை: 6 இதழ்: 213

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 24-11-1990

## ஆரையம்பதியில் தமிழர் ஒருவர் வெட்டிக்கொலை

(யாழ்ப்பாணம்]

ஆரையம்பதி கிராமத்தில் முஸ்லிம்களினால் தமிழர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை கடதாசி ஆலை ஊழியரான இவரது சடலம் தலையில்லாத நிலையில் காத்தான் குடி ஆரையம்பதி வீதியில் உறவினரால் கண்டெடுக்கப்பட்டது.

கடந்த 17-ம் திகதிவரை இந்தச் சடலம் குறிப்பிட்ட வீதியில் அனாதரவாக கிடந்ததாக ஆரையம்பதியிலிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

# ● மாங்குளம் ராணுவமுகாம் மீது தாக்குதல்

# சகல பாதுகாப்பு அரண்களும் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி

## படையினர் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் சண்டை தொடர்ந்து நடைபெறுகிறது

[நமது நிருபர் தேவா]

மாங்குளம் சிங்கள இராணுவமுகாமினை நேற்று விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தினார்கள்.

இத்தாக்குதலினால் இராணுவ முகாமிலுள்ள சகல பாதுகாப்பு அரண்களும் புலிகளிடம் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் இராணுவத்தினர் தரப்பில் பலத்த உயிர்ச்சேதமேற்பட்டுள்ளதாகவும், சண்டை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினமிரவு 7-00

(4-ம் பக்கம் பார்க்க)

## அவசர சிகிச்சை நோயாளரும் வைத்தியசாலைக்குள் வாகனத்தில்செல்ல தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு அவசர சிகிச்சைக்காக கொண்டு செல்லப்படும் நோயாளர்கள் வாகனங்களுடன் மேற்படி வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு வளவுக்குள் செல்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

புதிய நடைமுறையின் பிரகாரம் அவசர சிகிச்சைக்காக கொண்டு வரப்படும் நோயாளர்கள் போதனா வைத்தியசாலையின் உட்புகும் வாகனங்களை நிறுத்தி அங்கு கடமையிலிருக்கும் தொண்டர்களுக்கு அறிவித்தால் அவர்கள் உடனடியாக வெளி

(4-ம் பக்கம் பார்க்க)

## தெரிவு செய்யப்பட்ட நோயாளர்கள் நாளை கொழும்பு பயணம்

[யாழ்ப்பாணம்]

கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்ட நோயாளர்கள் நாளை காலை பருத்தித்துறையிலிருந்து கொழும்புக்கு புறப்படவுள்ள கப்பலில் அனுப்பப்படவுள்ளனர்.

இந்நோயாளர்களை நாளை காலை 6-30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு சமுகமளிக்குமாறு வைத்தியசாலைப் பாணிப்பாளர் கேட்டுள்ளார்.

குறிப்பிட்ட தினத்தில் வர வசதியற்றோர் முதல் நாள் ஆஸ்பத்திரியில் வந்து தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு செல்லவுள்ளோர் 3 நாளைக்குத் தேவையான

[4-ம் பக்கம் பார்க்க]

## தமிழ்மாணவரைமுஸ்லிம்கள் தேடிஅழித்து வருகிறார்கள்!

(யாழ்ப்பாணம்)

காரைதீவுப் பகுதியில் க. பொ. த. (உயர்தரம்) கல்வி பயின்ற, கல்வி கற்கும் தமிழ் மாணவர்களை முஸ்லிம் ஊர்காவற் படையினர் தேடி அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்களென்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த நான்கு மாதங்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரவுப்பதிவு, நிதிவிபரங்கள் கொழும்புக்கு அனுப்ப கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரச திணைக்களங்களில் கடந்த 5 மாதங்களாக செலவழித்த நிதிவிபரங்கள், ஊழியர் மாதாந்த வரவுச் சான்றிதழ் பட்டியல் ஆகியவற்றின் விபரங்கள் கொழும்பிலிருக்கும் திணைக்கள தலைமையலுவலகங்களுக்கு இதுவரை கிடைக்கவில்லையென கூறப்படுகின்றது.

இந்த விபரங்களை உடனடியாகத் திரட்டி கொழும்பு

(4-ம் பக்கம் பார்க்க)

## மீன்பிடித்தவர்கள் மீது பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக்கு அப்பாலுள்ள கல்முனைக்கடல் பகுதியில் நங்கூரமிட்டிருந்த கடற்படைக் கப்பலிலிருந்து நேற்று அதிகாலை கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

# பாண்டிருப்பில் படையினரால் கைதுசெய்யப்பட்ட 500 தமிழ் இளைஞர்காணமல் போய் விட்டார்கள்

(யாழ்ப்பாணம்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள பாண்டிருப்பு கிராமத்தில் சிறிலங்கா படையினரால் கைதுசெய்யப்பட்ட 500 தமிழ் இளைஞர்கள் காணமல் போய்விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பாண்டிருப்பு பகுதியில் கடந்த ஜூன் மாதத்திற்கு பின்னர் இடம் பெற்று வந்த இராணுவ தேடுதல் வேட்டை சுற்றி வளைப்பு போன்றவற்றின் போது கைது செய்யப்பட்ட இளைஞர்கள் பல முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டார்கள்.

இந்த இளைஞர்கள் பற்றிய விபரங்களை அறிவதற்கு இவர்களுடைய பெற்றோர்கள் அரசாங்க உயர்அதிகாரிகள் மூலம் இராணுவ முகாம்களுடன் தொடர்பு கொண்டபோது குறிப்பிடப்பட்ட இளைஞர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### O/L வினாவிடை

திறமைச்சித்திபெற உதவும் 1989 பரீட்சையின் ஆறுபாட வினாவிடை ரூபா 37/50. 1988 பரீட்சையின் ஆறுபாட வினாவிடை ரூபா 32/50. புத்தக சாலைகளில் கிடைக்கும்.

(எ-884)

### விற்பனைக்கு

சோதிட விலாச புத்தக சாலை, 46, பெரிய கடை, யாழ்ப்பாணம். வாடிக்கையாளர்களின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் கே. கே. எஸ்: வீதி, கொக்குவில் சந்தியில் இயங்குகின்றது. சகல புத்தகங்களும் மற்றும் பாடசாலை உபகரணங்களும் பெற்றுக்கொள்ளலாம். 1991-ம் ஆண்டு இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க கலண்டர் விற்பனையாகின்றது.

(சி-4151)

### "நிலவே நீ மயங்காதே"

மீரா வெளியீடு 'தவிக்கும் பெண் மனம்', 'தடுமாறும் பெண் மனம்', செய்வதறியாது திகைக்கும் பெண்மனங்களை இந்நாவலில் சந்தியுங்கள்: 100/-கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாகவும் வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர்.

(சி-4145)

## ஜே. வி. பி. மறைவிடம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

பதுளையில் பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கையால், ஓரிலாவெல என்னுமிடத்தில் ஜே. வி. பியின் மறைவிடமொன்றைக் கண்டுபிடித்துள்ளனர். பதுளைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட தீவிரவாதியொருவரின் தகவலையடுத்து இம்முகாம் கைப்பற்றப்பட்டது. இங்கிருந்து 72 வகையான பொருட்கள் கைப்பற்றப்பட்டன. (ச)

---

றேனியோ வேலைகளுக்கு

**தயா அச்சகம்**

138, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(ஏ-877)

---

**நீம் சுகாதார தூபம்**

நுளம்புத் தொல்லையிலிருந்து இயற்கை வழி விடுதலை தருகிறது.

தனிப் பைக்கற் ரூபா 1/- மட்டுமே.

**மில்க்வைற், யாழ்ப்பாணம்.**

(ஏ-886)

## ராசி பலன்

24-11-1990

சனிக்கிழமை

ஸப்தமி பி. இ. 1-28வரை. திருவோணம் மு. ப. 8-49 வரை. ராகு காலம் காலை 9-11 முதல் 10-41 வரை; நல்லநேரம் காலை 3-11 முதல் 4-41 வரை மரணயோகம்.

மேஷம்: புதிய யோசனை, தொழில் சிறப்பு, பணவரவு நண்பர்கள் சகாயம்.

இடபம்: குறுக்குவிசாரணை, குடும்ப கலகம், தொழில் பாதிப்பு, வைத்திய செலவு.

மிதுனம்: தடுமாற்றம், அந்நியருதவி, குடும்ப கவலை, சகோதர விரோதம், மனச் சுமை.

கடகம்: வாழ்வில் எதிர் நீச்சல், தொழில் லாபம், எதிர்பாராத உறவு, சுபகாரிய செலவு.

சிங்கம்: விருந்துபசாரம், அறிஞர் சந்திப்பு, புதிய ஸ்நானம், தானதர்மம், புகழ்.

கன்னி: கருத்து மோதல், கடும் சினம், பகைமைஉணர்வு குடும்பப் பிரிவு.

துலாம்: பயணங்களால் தொல்லை, தொழில் நஷ்டம், அதிகாரிகள் பகை, குடும்ப சச்சரவு.

விருச்சிகம்: தொழில் முயற்சி, சகோதரர் உதவி, மனை மாற்றம், எதிர்பாராத செய்தி.

தனுசு: தூரத்து உறவு, குடும்பத்தில் வேற்றுமை, தவறான எண்ணம், அதிகாரிகள் சினம்.

மகரம்: வீட்டில் சுபகாரியம், தொழில் போட்டி, பயணங்களால் அலைச்சல், காரிய வெற்றி.

கும்பம்: புறம்போக்கு, மனக்குறை, வீட்டில் மனஸ்தாபம், மனைவியால் கவலை.

மீனம்: வேண்டியவை கிட்டல், தொழில் லாபம், பணவகை, உற்சாகம், குடும்ப மகிழ்ச்சி.

ஜோஸ்யர்.

---

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## ஆஸ்பத்திரி இயங்கவில்லை மக்கள் பெரும் அவதி

(கொழும்புத்துறை)

மண்டைதீவு கிராமிய அரசினர் வைத்தியசாலை ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கையால் கடந்த நான்கு மாதங்களாக இயங்கவில்லை, இதனால் இப்பகுதி மக்கள் மருத்துவ, சுகாதார வசதிகளின்றி பலத்த சிரமமடைந்துள்ளனர்,

மருத்துவ வசதியின்மையால் இப்பகுதியில் ஒரு புதுவித மான காய்ச்சலும், கண் நோயும் வயிற்றோட்டமும் பரவி வருகிறது.

மருத்துவ, சுகாரச்சீர்கேடுகள் பற்றிப் பலமுறை யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினர்களுக்கும் முறைப்பாடு செய்தும் இதுகாலவரை இக்கிராம மக்களின் இக்கோரிக்கைகளை ஏற்று நிறைவேற்றி வைக்கப்படவில்லையாம்.

## கிளிநொச்சியில் விவசாய பீடம் டிச.3-ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயப் பீடம் கிளிநொச்சியில் இயங்கத் தொடங்கியுள்ளது. எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ந் திகதி விவசாய பீடத்திற்கான புதிய மாணவர் அனுமதி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி விவசாய பீடக் கட்டட வேலைகள் இன்னும் பூர்த்தியடையாமையால் கிளிநொச்சி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயப் பீடம் தற்காலிகமாகச் செயற்படத் தொடங்கியுள்ளது.

விவசாயப் பீடத்திற்குத் தேவையான விரிவுரையாளர்களையும், போதனாசிரியர்களையும் நியமிப்பதற்கான நடவடிக்கைகளை, யாழ். பல்கலைக் கழகத் துணை வேந்தர் மேற்கொண்டுள்ளார். (54)

## 'கற்பகா' பனம் பாண் யாழ். நகரில் விற்பனை

(யாழ்ப்பாணம்)

50 சத வீதம் பனம்பழச் சாறு கலந்த 'கற்பகா' என்ற பெயர் தாங்கிய பனம் பாண் நேற்று யாழ் நகரில் விற்பனை செய்யப்பட்டது.

பனை அபிவிருத்திச் சபையினால் உற்பத்திசெய்யப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்ட இப் புதிய பாண் மாவீரர் தினக் கண்காட்சிகளில் இன்று விற்பனையாகிறது.

3 தினங்கள் வைத்திருக்கத்தக்க இந்தப் பாண், 50 வீதம் பனங்களி சேர்க்கப்பட்டு, பட்டர் பாண் போன்று சுவையுள்ளதாக உள்ளது. (123)

## யாழ். மாவட்ட சேத விபரங்களை திரட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த யூன் மாதத்தின் பின்ஏற்பட்ட இராணுவத்தாக்குதல், விமானக்குண்டு வீச்சுத்தாக்குதல் சேதவிபரங்களை இம்மாத இறுதிக்குள் திரட்டுமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சகல உதவிஅரச அதிபர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

அரசாங்க, கூட்டுறவு, சபைகள், பொதுச்சொத்துக்கள், தனியார் சொத்துக்கள், வணக்க ஸ்தலங்கள் என்று மூன்று பிரிவாக இச்சேத விபரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்விபரங்களை அவ்வப்பகுதிக் கிராம சேவை அலுவலர்கள் மூலம் உதவி அரச அதிபர்கள் துரிதமாகத் திரட்டி வருகின்றனர். திணைக்களங்களின் சேதவிபரங்கள் திணைக்களத்தலைவர்கள் மூலம் திரட்டப்பட்டு வருகின்றன. பாதிக்கப்பட்டோர் தமது சேத விபரங்களை உடனடியாகப்பதிவு செய்து கொள்ளவேண்டுமென்று கோரப்பட்டுள்ளது. (54)

---

## பாதுகாப்புச் சேவை

மேலே குறிப்பிட்ட சேவைக்கு பாதுகாப்பாளர்கள் தேவை. யாழ். நகர எல்லை 3 மைலுக்குள் வசிப்பவர்களாயும் O/L தராதரமுடையவர்களாயும் 40 வயதிற்கு மேற்படாதவர்களாயும் இருத்தல்வேண்டும். இராம சேவையாளரது பத்திரமும் வசிப்பிடப்பகுதியிலுள்ள சமாதான நீதவான் அல்லது டொக்ரர் சிபார்சுக்கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் 5-12-90க்கு முன்னர் அனுப்பவேண்டும். விளம்பர இலக்கம்: 887 மே/ப ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(எ-887)

---

## சாவகச்சேரி நகராட்சி மன்றம் 1991-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

01-01-1991 தொடக்கம் 31-12-1991 வரையிலான காலப்பகுதிக்குள் கீழ்க் குறிப்பிடப்படும் வியாபாரம், சேவைகளுக்கான கேள்விகள் இரு பிரதிகளில் 30-11-1990-ம் திகதி பிற்பகல் 4-15 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | வியாபாரம் | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஆட்டிறைச்சிக்கடை | என். எம். எஸ். 1 | 14500/- | 1000/- | 50/- |
| 2. | ஆட்டிறைச்சிக்கடை | என். எம். எஸ். 11 | 14500/- | 1000/- | 50/- |
| 3. | மாட்டிறைச்சிக் கடை | என். எம். எஸ். 111 | 55740/- | 1000/- | 50/- |
| 4. | மாட்டிறைச்சிக்கடை | என். எம். எஸ். IV | 53720/- | 1000/- | 50/- |
| 5. | வாகனம் நிற்பாட்டும் இடங்களில் குத்தகை அறவிடுதல் | | 18298/- | 250/- | 25/- |
| | சேவை | | | | |
| 6. | குப்பை கூழங்களை அகற்ற இரட்டைமாட்டு வண்டில்/ உழவு இயந்திரம் பெட்டி உட்பட வாடகைக்கு வழங்குதல் | | — | 100/- | 50/- |

மேற்படி வைப்புப் பணமும, கேள்விப்படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன்பேரில் 29-11-90-ம் திகதி நண்பகல் 12-30 மணிவரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டா. சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படும். மேற்படி கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

த. நவரத்தினராசா
செயலாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

நகராட்சி மன்ற அலுவலகம்,
சாவகச்சேரி.

(ஏ 888)

---

புனித பத்திரிசியார் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

காலம்சென்ற
பழைய மாணவர்க்கான

## ஆராதனையும் திருப்பலியும்

இவ்வுலக வாழ்வை நீத்த பழைய மாணவர்களின் ஆத்ம இளைப்பாற்றிற்கான ஆராதனையும் திருப்பலியும் எதிர்வரும் 29-11-1990 வியாழக்கிழமை காலை 6-30மணிக்கு கல்லூரித் தேவாலயத்தில் சங்கத்தின் தலைவர் அருட்திரு ஜி. ஏ. எப். ஜோசப் அவர்களால் நிறைவேற்றப்படும்.

கல்லூரியின் பழைய, தற்போதைய மாணவர்கள் அனைவரையும் ஆராதனையில் பங்குகொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஜி. ஆர். இராசசிங்கம்
கௌரவ பொதுச்செயலாளர்
O. P. A. - S. P. C.

59, பத்திரிசியார் வீதி,
யாழ்ப்பாணம்.
21-11-90.

(எ-891)

## தியாகி திலீபன், அன்னை பூபதியின்
# தியாக மரணங்கள், ஈழத் தமிழருக்கு
# பெருமையைப் பெற்றுக்கொடுத்தது

[4]

அரசியல் தலைவர்களும், அரசியல் பிரமுகர்களும் தமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காகச் சாத்வீகப்போராட்டங்களையும் ஆயுதப்போராட்டங்களையும் நடாத்திவருகின்றார்கள். ஒரு மெழுகுவர்த்தியைப் போலத் தன்னை உருக்கித் தனது துன்பங்களை மற்றவர்களுக்கு உணரச் செய்து மற்றவர்கள் மனதில் கருத்து மாற்றத்தை ஏற்படுத்தித் தனது நியாயபூர்வமான கோரிக்கைகளை மற்றவர்களும் ஏற்கச்செய்து தனது நோக்கினை வென்றெடுப்பதே ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தின் நோக்கமாகும். இப்போராட்டத்தின் உச்சக்கட்டமாக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை உலகின் பல பாகங்களிலும் வாழும் அரசியல் பிரமுகர்கள் பின்பற்றி இருக்கிறார்கள்.



அன்னை பூபதி

ஆந்திரமாநிலத்தைப் பிரித்துத் தரும்படி பொட்டி ஸ்ரீராமுலு சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார். சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயரிடக்கோரி சங்கரலிங்க நாடார் சாகும்வரை உண்ணாவிரதமிருந்தார். இவர்கள் இருவருமே தமது போராட்டத்தின் இறுதியில் மரணத்தைத் தழுவிக்கொண்டனர். ஆனால் தெலுங்குதேச மக்கள் மத்தியில் பொட்டி ஸ்ரீராமுலு ஊட்டிய தேசியவாத உணர்ச்சி இணைந்துவிடவில்லை. அது மூறுபூத்த நெருப்பாகவே இருந்தது. தெலுங்கானு போராட்டமும் பின்னர் என். டி. ராமராவ் தலைமையிலான தெலுங்குதேசம் கட்சியும் அன்று பொட்டி ஸ்ரீராமுலுவின் தியாக மரணத்தின் அடியொற்றி அவரது தியாகத்தின் கட்டுமானத்தில் வளர்க்கப்பட்டவையாகும். இதேபோல சென்னை மாநிலத்தை 'தமிழ்நாடு' என்று அறிஞர் அண்ணு தலைமையிலான அரசு பெயர் சூட்டுவதற்குக் கால்கோளாக அமைந்தது சங்கரலிங்கநாடாரின் உயிர்த்தியாகமேயாகும்.

இதேபோல ஐரிஷ்விடுதலைப் போராட்டத்தில் பிரித்தானியரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பொபி சாண்ட்ஸ் சிறையில் தம்மை அரசியல் கைதியாக மனிதாபிமானத்துடன் நடத்துமாறு கோரி சிறைக்குள்ளேயே சாகும்வரை உண்ணாவிரதமிருந்தார். அவர் சிறையிலேயே மரணத்தைத்தழுவிக் கொண்டாலும் ஆயுதப் போராளியான பொபி சாண்ட்ஸ் ஊட்டிய தேசிய உணர்வு இன்று ஐரிஷ் விடுதலைப் போராளிகளது துப்பாக்கிகளினூடாகக் கனன்று கொண்டேயிருக்கிறது.

**மணிமாறன்**

ஆனால் இவர்கள் எவருமே படைத்திராத ஒரு தனித்துவமான வரலாற்றுச் சிறப்பை விடுதலைப்புலிகளின் முன்னாள் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் லெப் கேணல் திலீபன் படைத்தான். ஆயுதப்போராளியான திலீபன்- சிறிலங்கா அரசுடன் களங்களிலே ஆயுதங்களுடன் மோதிய திலீபன் இந்திய அரசு இலங்கைத்தமிழர் பிரச்சினையில் நேரடியாகத்தலையிட்டபோது அக்கால கட்டத்தில் நிலவிய அரசியல் சூழ்நிலைகளை அனுசரித்து ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து சாகும் வரை உண்ணாவிரதப்போராட்டம் ஒன்றை நடத்தினன். போராட்ட வடிவங்கள் மாறலாம், போராட்ட இலட்சியம் மாருது'' என்று தலைவர் வே. பிரபாகரனின் சுதுமலைப் பிரகடனத்திற்கு திலீபன் செயல்வடிவம்கொடுத்தான். ''விடுதலைப் புலிகள் வித்தியாசமானவர்கள்'' என்று திலீபன் அடிக்கடி சொல்வான். அதற்கேற்ப திலீபனும் உண்ணாவிரதப்போராட்டத்தை இதுவரை உலகிலே எவருமே செய்யாத முறையில் செய்து காட்டினன். அதாவது உண்ணாவிரதம் இருந்த நேரம் தொடக்கம் தான் இறக்கும் கடைசி நிமிடம் வரை ஒரு துளி நீர் கூட அருந்தாது உண்ணாவிரதப் போராட்டத்திற்குப் புதிய பரிமாணம் கொடுத்து திலீபன் தியாக மரணமடைந்தான். இப்படி ஒரு சாதனையை உலகிலே யாருமே படைத்ததில்லை. இதனால்தான் அவனது தியாகத்தின் எதிரொலி இன்று தென்கிழக்காசியா தொடக்கம் மேற்கு ஐரோப்பிய நாடுகள் வரை தமிழர் விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை உணர்த்தி நிற்கின்றது.

இதேபோல இந்திய அரசுக்கு எதிராக 1988ம் ஆண்டுக் காலகட்டத்தில் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து அன்னை பூபதி சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினர். விடுதலைப்புலிகளுடன் இந்திய மத்திய அரசு நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளவேண்டும் என்பதும் அதைத் தொடர்ந்து நிபந்தனையற்ற முறையில் அவர்களுடன்பேச்சுவார்த்தை நடாத்தி இலங்கைப்பிரச்சினைக்கு இலங்கை வாழ் தமிழ்ப் பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை உருவாக்க இந்திய மத்திய அரசு முயலவேண்டும் என்பதும் அவரது இரண்டு கோரிக்கைளாகும். அன்னை பூபதி அவர்களோ ஒரு அரசியல்வாதியுமல்ல ஆயுதப்போராளியுமல்ல. அவர் ஒரு சாதாரண குடுப்பப்பெண் அவரது கோரிக்கைகள் தமிழ்ப் பொதுமக்களின் ஏகோபித்த கருத்தின் வெளிப்பாடு என்பதோடு தமிழ்ப் பொதுமக்களின் நியாயபூர்வமான போராட்டத்தில் குறியீடாகவும் அமைந்தது. வன்னிக்காட்டிலும் நித்திகைக்குளத்திலும் இடம் பெற்றுவந்த தமிழீழப் போராட்டத்தின் மையத்தை பொதுமக்கள் மத்தியில் அன்னைபூபதி கொண்டுவந்தார். ஆயுதப் போராட்டத்தின் நியாயத் தன்மையை அவரது சாத்வீகப்போராட்டம் நியாயப்படுத்தியதோடு அதனை ஒரு வெகுஜன எழுச்சியாகவும் மாற்றியமைத்தது. சரியாக ஒரு மாத காலத்தின் பின் அவர் உயிர் துறந்தார்.



திலீபன்

உலகிலேயே அரசியல் போராட்டம் ஒன்றில் நீர்கூட அருந்தாது உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்த முதல் பெண் மணி என்ற பெருமையையும் அன்னை பூபதி பெற்ருர்.

தியாகி திலீபனதும் அன்னை பூபதியினதும் தியாக மரணங்கள் உலக வரலாற்றில் யாருக்குமே கிடைக்காத பெருமையை ஈழத்தமிழர்களுக்குப் பெற்றுக்கொடுத்தது. ஆந்திராவில பொட்டி சிறிராமுலுவின் மரணத்தினல்ஏற்பட்ட எழுச்சியை எப்படிப் பிரதமர் நேருவால் கட்டுப்படுத்த முடியவில்லையோ அதேபோல திலீபனதும் அன்னை பூபதியினதும் தியாக மரணத்தால் உருவான தமிழர் எழுச்சியை நேருவின் பேரன் பிரதமர் ராஜீவ் காந்தியாலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

அமைதிப்படை என்ற பெயரில் வெள்ளைக்கொடியோடு ஈழ மண்ணிற்குள் காலடி எடுத்துவைத்தவர் இரத்தக் கறை படிந்த தமது கரங்களில் துப்பாக்கிகளைத் தலைகிழாகப் பிடித்தபடி ஈழ மண்ணின் கடற்கரையைத் தாண்டி இந்தியக் கரைகளில் கப்பல் கப்பல்களாகச்சென்று இறங்கினர்கள்.

---

# மாவீரர்நாள் நிகழ்ச்சிகள்

(சித்தன்கேணி)

சுழிபுரம்மாவீரர் தினத்தையொட்டி கிழக்கில் உள்ள பல வீதிகள் சிரமதானத்தின் மூலம் திருத்தியமைக்கப்படுகின்றது.

சுழிபுரம் கிழக்கு சிற்றூர் அவையினரும் பொதுமக்களும் இணைந்து சுழிபுரம் கிழக்கிலுள்ள பல வீதிகளை விரிவுபடுத்தி திருத்தி அமைக்கின்றனர்.

### தூபி அமைப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இறந்த நாற்பத்தைந்து போராளிகளின் சடலங்கள் புதைக்கப்பட்டிருந்த தோட்டத்தில், மகுடம் கபான்ற தூபி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாவீரர் தினத்தை முன்னிட்டு இத்தூபி திறக்கப்பட்டுள்ளது. தோட்டவெளியில் கம்பீரமாக காட்சி கொடுக்கும். இத் தூபியில் மாவீரர் நினைவாக புலிக்கொடி பறக்கவிடப்பட்டுள்ளது. (123)

### பனைவளம் பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணக் குடாநாடெங்கும் வீதிகள் தோறும் அமைக்கப்பட்டுள்ள வளைவுகள், சிகரங்கள் தமிழ் ஈழத்தின் பிரதான மூலவளங்களில் ஒன்ருன பனை வளத்தைக் கொண்டே செய்யப்பட்டுள்ளன,

பனை மரங்கள், பனை மட்டைகள், பனை ஓலைப் பாய் போன்ற பொருட்களால் செய்யப்பட்டவைகளாகவே வளைவுகளும் சிகரங்களும் காணப்படுகின்றன. பனைப் பொருட்களை அலங்கார வளைவுகளுக்கும் சிகரங்களுக்கும் எப்படிப் பயன்படுத்தலாம் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளன, (123)

### திராவிட கலையம்சம்

(அராலி)

மாவீரர் தினத்தையொட்டி வட்டுக்கோட்டைத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர்தின வளைவுகளும் அலங்காரங்களும் பெருமளவு திராவிட சிற்ப, ஓவியக் கலை அம்சங்களை மையமாகக் கொண்டு தற்போதைய விடுதலைப் போராட்ட சின்னங்களை சித்தரித்தவண்ணமுள்ளன.

இவ் வளைவுகளிலும் அலங்காரங்களிலும் தூங்கு போதிகைகள், நாசித் தலைகள் உட்பட பல திராவிட சிற்ப ஓவியக் கலையம்சங்கள் காணப்படுகின்றன.

சில இடங்களில் திருவாசி போன்ற அதிகளவு வேலைப்பாடுடைய வளைவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சித்தன்கேணி, அராலி, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் இவற்றை காணமுடிகின்றது.

### வீதிகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு, தொல்புரம் சிற்றூரவையினர் தொல்புரம் விக்னேஸ்வரா சனசமூகநிலையம், தொல்புரம் மத்தி சனசமூக நிலையம், வள்ளுவன் சனசமூக நிலையம், கலைவாணி சனசமூக நிலையம், செல்வா சனசமூக நிலையம், திலீபன் சிறுவர் பாடசாலை நிர்வாகிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் சீர்கெட்டிருந்த பல்வேறு வீதிகளும் புனரமைக்கப்பட்டன.

பல ஆண்டுகளாகத் திருத்தப்படாதிருந்த நிலையிலிருந்த பாணுவெட்டி-வழக்கம்பரை வீதியும் இவற்றில் அடங்கும்.

மாவீரர் விழாவையொட்டி சுழிபுரம் பகுதியில் 1984ல் படுகொலை செய்யப்பட்ட இளம் புலிகள் புவி, சிவா, ஈசன், தேவன், பேபி சாளி, லம்போதரன் ஆகியோரின் நினைவாக வீதிகளுக்குப் பெயர் சூட்டப்படும். மரக் கன்றுகளும் நாட்டப்படும்.

பாணுவெட்டியில் பாரிய அலங்கார வளைவும் அமைக்கப்பட்டுள்ளது. 25ந் திகதி தொல்புரம் மைதானத்தில் மாவீரர் நினைவுக் கூட்டமும் நடைபெறும்.

### மயான மண்டபம்

(வடமராட்சி)

வடமராட்சியில் வீர மரணமடைந்த மாவீரர்களின் புகழுடம்புகளை அடக்கம்செய்யும் மயானத்தில் மயான மண்டபம் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. மேற்படி மண்டபம், மாவீரர் தினத்தையொட்டித் திறந்துவைக்கப்பட உள்ளது.

### புதிய சந்தை

(வேலணை)

வேலணை வங்களாவடி அஞ்சல்நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள காணி ஒன்றில் புதிய சந்தைக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டுவருகின்றது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தீவகப் பிரிவினரால் அமைக்கப்பட்டு வரும் இப்புதிய சந்தை எதிர் வரும் 27ந் திகதி மாவீரர் தினத்தன்று பொதுமக்களின் பாவனைக்காகச் சம்பிரதாய முறைப்படி திறந்துவைக்கப்பட உள்ளது.

### சிறப்பு நிகழ்ச்சி

(அச்சுவேலி)

வலி-கிழக்கு அச்சுவேலி தனியார் மினிபஸ் சங்கத்தின் மாவீரர் தினச் சிறப்பு நிகழ்ச்சி 26ம் திகதி அச்சுவேலியில் நடைபெறும்.

சங்கப் பணிமனையில் நடைபெறும் இச்சிறப்பு நிகழ்ச்சியில் வீரமரணம் அடைந்த போராளிகளின் பெற்ருேர் பாராட்டிக் கௌரவிக்கப்பட உள்ளனர்.

---

# பாலைவனத்தில் நீரூற்று 200 வருடத்திற்கு போதும்

(லண்டன்)

பாலைவனத்தில் நீர்நிலைகள் உண்டென்பதையும், அந்நீர் நிலைகளில் இருந்து பெறப்படும் குடிநீர் பத்துலட்சம் மக்களுக்கு 200 வருடங்களுக்கு போதுமானதென விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இவ்வாராய்ச்சிகளை முதலில் இந்தியரான கிளேயர் பீயர்ஸ் என்பவர் ஹெலியில் இருந்து கண்டு பிடித்தார்.

இவரது ஆராய்ச்சியின்பெறுபேறுகளை அடிப்படையாக வைத்து நெதர்லாந்து நாட்டு விஞ்ஞானி பென்பால் ஹெலியில் பொருத்தும் நீர்நிலைகளை கண்டுபிடிக்கும் கருவியை அறிமுகப்படுத்தியுள்ளார். (ச)

---

# இந்திய அமைச்சரவையில் சர்ச்சைக்குரிய அமைச்சர்கள்

(புதுடில்லி)

இந்தியாவின் புதிய வெளியுறவு அமைச்சராகப் பதவியேற்றுள்ள வி. சி. சுக்லா இந்திராகாந்தியின் நெருங்கிய ஆலோசகர். பல அமைச்சுக்களின் அமைச்சராக இருந்தவர். நீண்ட அரசியல் அனுபவம் பெற்றவர். அவசரகால கட்டத்தில் சர்ச்சைக்குரிய திரைப்படப் பிரதிகளை எரித்து அதன் மூலம் மொரார்ஜி தேசாய் ஆட்சிக் காலத்தில் பல வழக்குகளில் சம்பந்தப்படுத்தப்பட்டவர். சஞ்சே காந்தியின் நடவடிக்கைகளில் பங்கு கொண்டவராக எதிர்க்கட்சிகளால் காரசாரமாகக் கண்டிக்கப்பட்டவர்.

நிதியமைச்சராக பொறுப்பேற்றுள்ள ஜஸ்வன் சின்கா வி. பி. சிங்கின் நெருங்கிய நண்பராக இருந்தபோதும் சந்திரசேகருக்கு வி. பி. சிங் அமைச்சரவையில் இடம் கொடுக்காமையால் தான் எந்தப் பதவியையும் ஏற்கப் போவதில்லையென்று பிடிவாதமாக இருந்தவர். நல்ல பேச்சாளர், கல்வியால் ஞானம் மிக்க பொருளாதார நிபுணர்.

வர்த்தக நீதி, நிர்வாகத் துறை அமைச்சர் சுப்பிரமணியசுவாமி தமிழ் நாடு சோழாவரத்தைச் சேர்ந்தவர். இலங்கைத் தமிழர் விவகாரத்தில் ராஜ்யசபையில் காரசாரமான வாதங்களை ... க்கியவர். இலங்கைக்கு படகுமூலம் வரவிருந்த போது ... இந்திய கடற்படையின் வழிமறித்தலினால் பயணத்தை நிறுத்தியவர். ஆவேசமான அரசியல் சிந்தனையாளர். (ச)

# ஈழத்தமிழர் பிரச்னை தொடர்பாக பேச்சு நடத்த இந்திய அமைச்சர் சுக்லா கொழும்பு வருகிறார்

(மாலே)

இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்து இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்த இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. வி. சி. சுக்லா விரைவில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்வார். இவரது விஜயத்துக்கான திகதி இதுவரை அறிவிக்கப்படவில்லை. இத்தகவல்களை இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் மாலேயில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இனப்பிரச்னை தொடர்பாக பேச்சுக்கள் நடாத்த முன்னாள் வெளியுறவு அமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ரால் இம்மாத முற்பகுதியில் இலங்கை வரவிருந்தபோதும் இந்தியாவில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தால் அவரது விஜயம் ரத்தானதும் தெரிந்ததே (ச)

# இலங்கை உதவி கோரினால் இந்தியா நிறைவேற்றும்

## பிரதமர் சந்திரசேகர்

(மாலே)

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்னை தொடர்பாக இலங்கை அரசு உதவி கோருமானால் அதனை நிறைவேற்ற இந்தியா தயாராயுள்ளதாக இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

மாலேயில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், இலங்கைப் பிரதமருடன் நான் இதுகுறித்து கலந்தாலோசித்துள்ளேன். தற்போது அங்கு நடைபெற்றுவரும் நடவடிக்கைகள் உள்நாட்டுப் பிரச்னையாகும். இலங்கை இந்தியாவிடம் உதவிகோரினால் அதனை இந்தியா நிறைவேற்ற தயாராயுள்ளது.

இந்தியா எப்போதும் பிராந்தியத்தில் ஒற்றுமையையும் சமாதானத்தையுமே விரும்புகின்றது. ஒருநாட்டின் கண்ணியத்தையும், ஆட்சி உரிமையையும் பாதிக்கும் விதத்தில் இந்தியா நடந்து கொள்ளாது. இந்தியா எப்போதும் அண்டை நாடுகளுடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ளவே விரும்புகின்றது என்றும் கூறினார், (ச)

### கொட்டாஞ்சேனை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தொழுகை நடத்திக்கொண்டிருந்த முஸ்லிம்கள் தொழுகையின் பின்னர் ஊர்வலமாக வந்து குறிப்பிட்ட ஆலயத்திற்குள் நுழைந்து அங்கிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள்.

ஆலயத்தில் பூசை செய்துகொண்டிருந்த பூசகர் உட்படப் பலரை ஆலயத்திற்கு வெளியே இழுத்துவந்து கத்தியால் குத்திக் காயப்படுத்தினார்கள்.

காயமடைந்தவர்களில்பலர் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இச்சம்பவத்தையடுத்து கொழும்பிலுள்ள சைவாலயங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் கொழும்பிலுள்ள தமிழர்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (து)

### தெரிவு செய்யப்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உணவுவகைகளும் குடிநீரும் மருந்து பாவிப்போர் ஒரு கிழமைக்குத் தேவையான மருந்து வகைகளும் கொண்டுவருதல் வேண்டும்.

நோயாளிகளுடன் செல்வோர் யாழ் மாவட்டத்தை விட்டு வெளியேறுவதற்கான நடைமுறைகளை கடைப்பிடித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட நோயாளர் விபரம் வருமாறு: செல்லையா யோகவதி, ஜெயசோதி, பாக்கியம், த. மகேஸ்வரி, சத்தியலஷ்மி, வி. நடராசா, இராணியம்மா (வராத்துப்பளை), இ. இரட்ணசிங்கம் (கலைப்புலவர் வீதி), ஈ. சந்திரநாதன் (அரியாலை), எம். எம். ஜோய் (யாழ்நகர்), துரைராசா (புளியங்குளம்), மயில்வாகனம் (அரியாலை), தபன் (மட்டுவில்), தெய்வேந்திரன் (பருத்தித்துறை), திருமதி பிரான்சிஸ் (யாழ்நகர்), ச. சுரேந்திரன், வி. கிருஷ்ணராசா, சபேசன் (உடுப்பிட்டி), யோகேஸ்வரன் (காரைநகர்), கந்தையா (கந்தரோடை), ஞானசுந்தரம் (யாழ்நகர்), நயினுமுகமது நாச்சியார், வசந்தராசா, ஏ. புவனேஸ்வரி (153)

### புலவர் கீரன் காலமானார்

(சென்னை)

சமயச் சொற்பொழிவாளர் புலவர் கீரன் நேற்றுமுன் தினம் மாலை மாரடைப்பால் சென்னையில் காலமானார்.

இறக்கும்போது அவருக்கு வயது 55 ஆகும். ஆசிரியராக பணியை ஆரம்பித்த புலவர் கீரன் சமயக் கருத்துக்களை மக்கள் மனதில் இடம்பெறச் செய்வதற்கு பக்திரசத்துடன் சொற்பெருக் காற்றிவந்தார்.

இலங்கை, லண்டன், சிங்கப்பூர், மலேசியா உட்பட பல நாடுகளுக்கு அவர் சமயச் சொற்பொழிவாற்ற விஜயங்களை மேற்கொண்டார். சிறந்த பக்தி எழுத்தாளர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

### போராளிகள் உருவப்படம் திரைநீக்கம்

(தாவடி)

மாவீரர்கள் ஞாபகார்த்த நிகழ்வையொட்டி தாவடியில் மறைந்த ஐந்து போராளிகளின் திருவுருவப்படங்கள், அவர்களின் பெற்றோரால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

அன்ரன், யோகேந்திரன், குணம், காண்டீபன், லெப். நெப்போலியன் ஆகியோருக்கே உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. (ச)

### டெஸ்ட் கிரிக்கெட்

## இந்தியா 6 - 220

(புதுடில்லி)

இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையில் சண்டிகாரில் நடைபெறும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டமுடிவில் இந்தியா 6 விக்கெட்டுக்கள் நஷ்டத்திற்கு 220 ஓட்டங்களைப்பெற்றது.

ரவிசாஸ்திரி சிறப்பாக ஆடி 88 ஓட்டங்களையும், மனோச் பிரபாகர் - 38, காப்டன் அஸாருடீன் - 24, வென்சாகர் - 07, கபில்தேவ் - 04 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கையை சேர்ந்த வர்ணவீரா 3, அமரசிங்கா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள். (வி)

### வரவுப் பதிவு

1-ம் பக்கத் தொடர்ச்சி]

தலைமையலுவலகங்களுக்கு அந்தந்த திணைக்களத் தலைவர்கள் அனுப்பிவைக்குமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

செயலகத்தில் நடைபெற்ற அரச திணைக்கள தலைவர்கள் பங்குபற்றிய கூட்டத்திலே யாழ் அரச அதிபர் இதனைத் தெரிவித்தார். (153)

### வரி விளம்பரம்

#### மணமகள் தேவை

வேளாள இன 40 வயதுடைய கொழும்பில் கம்பனியில் வேலைசெய்து தற்சமயம் தனியாக வியாபாரம் ஆரம்பிக்க இருக்கும் நற்குணமுள்ள மணமகனுக்கு ஒழுக்கமும், பண்புமுள்ள, இலட்சணமான மணமகள் நியாயமான மான சீதனத்துடன் தேவை. சாதகக்குறிப்புடன்தொடர்பு கொள்ளவும். ஸ்ரீகாந் புத்தக சாலை, நல்லூர் கோவில் முன்பாக. (எ-890)

### பாண்டிருப்பில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அந்த முகாம்களில் இல்லையென்று தெரிவிக்கப்பட்டதாம். கிழக்கு மாகாணத்திலுள்ள சகல முகாம்களுடனும் தொடர்பு கொண்டபோதும் இந்த இளைஞர்கள் எங்கும் இல்லையென்று தெரிவிக்கப்பட்டதாம்.

இவர்களுடன் கைது செய்யப்பட்ட சில இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டபோதும் விடுதலை செய்யப்படாதவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (து)


## மில்க்வைற் காட்சிச்சாலை

உள்ளூர் வளம் செழித்திட
உள்ளூர்உற்பத்திகளை ஆதரிப்போம்

ஆய்வு நிறுவனம் உவந்தளிக்கும் கண்காட்சிகளில்

**மில்க்வைற் காட்சிச்சாலைக்கு**

தவறாது வருகை தருக, பயன் பெறுக.

யாழ். இந்துக்கல்லூரி காட்சிச்சாலையில்
விற்பனை நடைபெறும்.

ரூபா 25/-க்குச் சலவைப் பவுடர் வாங்கிப்
பொலித்தீன் பை, அகத்திக்கன்று, கீரைவிதை,
அன்பளிப்பு.

**மில்க்வைற்-யாழ்ப்பாணம்**


### பதில் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலக உதவி அரசாங்க அதிபரான செ. இன்பஜோதி நித்தியராஜ் நேற்று முதல் யாழ், மாவட்ட பதில் உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். செயலக பொதுசனத் தொடர்புத்துறை அதிகாரியாகவும் இவர் கடமையாற்றி வருகிறார். (153)

### ஷெல் தாக்குதல் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி முகாமிலிருந்து கோண்டாவில் நோக்கி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினால் இரு சிறுவர்கள் காயமடைந்தனர்.

நேற்று மாலை இடம் பெற்ற இத்தாக்குதலினால் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த சுதன் (12 வயது) எம். கோகிலா (14 வயது) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். [153]

### மீன்பிடித்தவர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மீது பிரங்கித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலால் சில படகுகள் சேதமடைந்துள்ளதுடன் ஒருசில படகுகளைக் கடற்படையினர் சுற்றிவளைத்துப் பிடித்து மீனவர்களை தாக்கி இப்பகுதிகளில் இனிமேல் மீன் பிடிக்கவரக்கூடாது என எச்சரிக்கைசெய்து விடுவித்தார்கள் (வி)

### உயர்தர

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம் ஊர்காவற்படையினரின் மேற்படி நடவடிக்கையினால் 75 மாணவர்கள் கடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் பல்கலைக்கழக அனுமதியில் கூடிய சந்தர்ப்பம் அளிக்கும் நடவடிக்கை காரணமாக மேற்படி நடவடிக்கையில் முஸ்லிம் ஊர்காவற்படையினரால் திட்டமிட்டுச் செய்யப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

காரைதீவுப் பகுதியிலுள்ள மாணவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுத் இடம் பெயர்ந்து காடுகளில் தஞ்சம் அடைந்துள்ளதாக அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்தவர்கள் தெரிவித்தனர். (153)

### மாங்குளம்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் இம்முகாம் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை மேற்கொண்டதினால் இராணுவத்தினர் நிலைகுலைந்தார்கள்.

இத்தாக்குதலில் இராணுவத்தினர் தரப்பில் பலத்த உயிர்ச்சேதமேற்பட்டுள்ளதுடன் முகாமின் பிரதான கட்டிடங்கள் பெரும் சேதம் அடைந்துள்ளன.

இச்சம்பவத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் சிலர் வீரமரணமடைந்திருக்கலாம் என்று ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவித்தன.

இராணுவத்திற்கு உதவியாக பொம்மர் விமானங்கள் போராளிகள் மீது தாக்குதல் நடத்திய வண்ணமிருந்தன.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை மாங்குளம் பகுதியில் பலத்த சண்டை நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது. (வி)

### மாவீரரை நினைவு கொள்வோம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர்களை நினைவு கொள்ளும் இவ்வாரத்தில் நாளை மறுதினம் 26ம் திகதி நள்ளிரவு 12 மணி 01 நிமிடத்திற்கு (27ம் திகதி அதிகாலை) தமிழீழத்திலுள்ள ஆலயங்கள், பாடசாலைகள், நிறுவனங்களில் பாரிய மணிகள் 2 நிமிடங்களுக்கு அசைந்து ஒலி எழுப்பும். அந்நேரத்தில் அனைத்து மக்களையும் தங்களிடங்களில் எழுந்து நின்று இரண்டு நிமிடம் அஞ்சலிசெய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்'' என்று விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த அஞ்சலி நிகழ்வு முடிந்ததும் 12 மணி 03 நிமிடத்திற்கு 'மாவீரர் சுடர்' ஏற்றும் நிகழ்வு ஆரம்பமாகும். மாவீரர்களின் நினைவாக இந்நேரத்தில் உங்கள் வீடுகளை திப்பந்தங்களால் சிட்டி விளக்குகளால், குத்துவிளக்குகளால் அலங்கரித்து சுடரேற்றி நினைவுகூருமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றும் அவ்வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி)

### புனரமைப்புதிட்ட ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டபுனர்வாழ்வு புனரமைப்புதிட்ட ஆணையாளராக திரு. செல்லையா பத்மநாதன் கடந்த திங்கள் முதல் பதவியேற்றுள்ளார்.

வவுனியா அரசாங்க அதிபராக இவர் முன்பு கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (153)

### எலும்பு முறிவுச் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் காலை 9-00 முதல் 12-00 மணி வரை, கைதடி அரசினர் ஆயுர்வேத போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் எலும்பு முறிவுச் சிகிச்சை நடைபெறும்.

### அவசர சிகிச்சை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளர் பிரிவுக்கு எடுத்துச் செல்வார்கள்.

மேற்படி ஒழுங்குவிதிகளை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கமும் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகமும் கலந்து ஆலோசித்தபின் நடைமுறைப் படுத்தவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை சேவைகள் தொடர்ச்சியாக நல்லமுறையில் இயங்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகதெரிவிக்கப்படுகிறது. (153)


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under umber B/100306/81.